**بسم الله الرّحمن الرّحيم**

## பிற மத கலாச்சாரத்தை பின்பற்றாதீர்

إنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ، مَنْ يَهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلَا هَادِيَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ،

وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، أَمَّا بَعْدُ فَإِنَّ خَيْرَ الْحَدِيثِ كِتَابُ اللهِ، وَخَيْرُ الْهُدَى هُدَى مُحَمَّدٍ، وَشَرُّ الْأُمُورِ مُحْدَثَاتُهَا، وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ

நிச்சயமாக எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அவனை நாம் புகழ்கிறோம்; அவனிடம் உதவி தேடுகிறோம். அவன் யாரை நேர்வழி செலுத்தினானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. அவன் யாரை வழிகெடுத்தானோ அவரை நேர்வழி செலுத்துபவர் யாரும் இல்லை. நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை அறவே இல்லை, மேலும் நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சி கூறுகின்றேன்.

பிறகு, பேச்சுகளில் மிக சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிமுறைகளில் மிக சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையாகும். காரியங்களில் மிக கெட்டவை மார்க்கத்தில் புதிதாக சேர்க்கப்பட்டவை ஆகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடாகும்.
அல்லாஹ் கூறுகின்றான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ

பொருள்: நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்படவேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாகவே தவிர நீங்கள் இறந்துவிட வேண்டாம். (அல்குர்ஆன் 3 : 102)

يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِنْ نَفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً وَاتَّقُوا اللهَ الَّذِي تَسَاءَلُونَ

بِهِ وَالْأَرْحَامَ إِنَّ اللهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا

பொருள் : மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஓர் ஆன்மாவில் இருந்து உற்பத்தி செய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரை படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து ஆண்கள், பெண்கள் என பலரை (இப்பூமியில்) பரப்பினான். ஆகவே, (அத்தகைய) அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவனைக்கொண்டே நீங்கள் (உங்களுக்குள் ஒருவருக்கொருவர் வேண்டியவற்றைக்) கேட்டுக்கொள்கிறீர்கள். இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்த உறவினர்களிடமும் (அன்பாக நடந்து கொள்ளுங்கள்). நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கவனித்தவனாகவே இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 1)

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا

பொருள்: நம்பிக்கையாளர்களே! நீங்களும் அல்லாஹ்வுக்குப் பயந்து நேர்மையான விஷயங்களைக் கூறுங்கள். அவன் உங்கள் காரியங்களை உங்களுக்கு சீர்படுத்தி வைத்து உங்கள் குற்றங்களையும் உங்களுக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்ப்படிகிறாரோ அவர் நிச்சயமாக மகத்தான வெற்றியடைந்து விட்டார். (அல்குர்ஆன் 33 : 70, 71)

கண்ணியத்திற்குரிய அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை முழுமையாக பயந்து கொள்ளுமாறு அல்லாஹ்வுடைய அச்சத்தை எனக்கும் உங்களுக்கும் நினைவுபடுத்தியவனாக ஆரம்பம் செய்கிறேன்.

அல்லாஹு தஆலா நமக்கு ஒரு சிறந்த மார்க்கத்தை தேர்ந்தெடுத்து இருக்கிறான்.

الْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِي وَرَضِيتُ لَكُمُ الْإِسْلَامَ دِينًا

இன்றைய தினம் நான் உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தை முழுமைப்படுத்திவிட்டேன். என் அருளை உங்களுக்கு நிறைவு செய்து இருக்கிறேன். (அல்குர்ஆன் 5 : 3)

உங்களுக்கு இஸ்லாமை மார்க்கமாக ஏற்று திருப்தி அடைந்து இருக்கிறேன் என்று அல்லாஹு தஆலா மிகத் தெளிவாக இந்த மார்க்கத்தின் உன்னதத் தன்மையை பற்றி நமக்கு எடுத்துச் சொல்கிறான்.

ஒரு முஸ்லிம் அல்லாஹ்வுடைய படைப்புகளில் மிகச் சிறந்த படைப்பாகும். காரணம் இஸ்லாம் என்ற ஓர் உயர்ந்த மார்க்கநெறி அவரிடத்தில் இருக்கின்ற காரணத்தினால். இந்த தீனை கொண்டுதான் ஒரு முஸ்லிம் அல்லாஹ்விடத்தில் கண்ணியம் அடைகிறான்.

வானம் பூமி சூரியன் சந்திரன் அனைத்தும் அல்லாஹ் அவற்றுக்கு கொடுத்த அந்த இஸ்லாமிய மார்க்கத்தில்தான் இருக்கின்றன. அல்லாஹு தஆலா அவற்றையெல்லாம் இந்த இஸ்லாமிய நெறியின் மீது அமைத்துவிட்டான்.

மனிதனுக்கு அல்லாஹு தஆலா இதை தேர்ந்தெடுத்து செயல்படுகின்ற அந்த தேர்வுரிமையை கொடுத்து இருக்கிறான். இவனுடைய விருப்பத்தின்படி இந்த மார்க்கத்தை தேர்ந்து எடுத்து, இதுதான் அல்லாஹ்வுடைய விருப்பம், இதன் அடிப்படையில் நடப்பதில்தான் எனக்கு இம்மையிலும் மறுமையிலும் கண்ணியம் இருக்கிறது என்று அந்த நம்பிக்கையோடு இவன் செயல்படும்போது, அல்லாஹ்விடத்தில் மிக உயர்ந்த தகுதியை பெறுகிறான். அல்லாஹ்விற்க்கு நெருக்கமானவர்களில் ஒருவன் ஆகிறான்.

ஆனால், இந்த மார்க்கத்தை கிடைக்கப் பெற்ற நாம் இந்த தீனுக்கு கொடுக்கக் கூடிய கண்ணியத்தையும், மகத்துவத்தையும் இந்த தீனுக்கு செய்ய வேண்டிய அந்த கடமைகளை செய்கிறோமா? இந்த தீனை கொண்டு நாம் கண்ணியத்தை உணர்கிறோமா? இந்த தீனை வாழ்க்கையில் நாம் பின்பற்றுவதில் பெருமை அடைகிறோமா? மகிழ்ச்சி அடைகிறோமா என்றால் கொஞ்சம் நம்மை நாமே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்று மாற்று மத கலாச்சாரம், காஃபிர்களின் அந்த இழிவுமிகு கலாச்சாரம், அவர்களுடைய அசிங்கமான அந்த நடவடிக்கைகள், முட்டாள் தனமான கலாச்சாரங்கள், இவைதான் இன்று முஸ்லிம்களில் பலருக்கு கவர்ச்சியாக தெரிகிறது.

முஸ்லிம்கள் பள்ளத்தை நோக்கி ஓடை ஓடுவது போல, அந்த காஃபிர்களின் அசிங்கமான கேவலமான முட்டாள்தனமான கலாச்சாரத்தை நோக்கி, அப்படியே ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

எது நமக்கு பயன் தரக்கூடியது, எது நமக்கு பயனற்றது, எது மார்க்கத்திற்கு முரண் அற்றது, எது மார்க்கத்திற்கு முரணானது என்பது எல்லாம் பகுத்து ஆராய்ந்து, எதை நாம் எடுத்துக் கொள்வதற்கு மார்க்கத்தில் அனுமதி இருக்கிறதோ, அதை மட்டும் எடுத்துக் கொள்ளாமல், மாறாக மாற்றார்கள் காண்பிக்கின்ற, அவர்கள் செய்கின்ற, அவர்கள் பரப்புகின்ற, அவர்கள் எதன் பக்கம் எல்லாம் அழைக்கிறார்களோ அதன் பக்கம் எல்லாம், குருடர்களாக, செவிடர்களாக பல முஸ்லிம்கள் ஓடுவதைப் பார்க்கிறோம்.

சகோதரர்களே! மிகவும் வருந்தத்தக்க மிகவேதனையான நிகழ்வு இது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்;

وَأَنَّ هَذَا صِرَاطِي مُسْتَقِيمًا فَاتَّبِعُوهُ وَلَا تَتَّبِعُوا السُّبُلَ فَتَفَرَّقَ بِكُمْ عَنْ سَبِيلِهِ ذَلِكُمْ وَصَّاكُمْ بِهِ لَعَلَّكُمْ تَتَّقُونَ

“நிச்சயமாக இதுதான் என் நேரான வழியாகும். அதையே நீங்கள் பின்பற்றுங்கள்; மற்ற வழிகளைப் பின்பற்றாதீர்கள். அவை அல்லாஹ்வுடைய வழியிலிருந்து உங்களைப் பிரித்துவிடும். நீங்கள் இறையச்சமுடையவர்களாக ஆவதற்காக (உங்கள் இறைவன்) இவற்றை உங்களுக்கு உபதேசிக்கிறான்” (என்று கூறுங்கள்). (அல்குர்ஆன் 6 : 159)

இன்று முஸ்லிம்கள் எப்படி தீனை புரிந்து வைத்திருக்கிறார்கள்? நாட்டுக்கு ஏற்ப தீன், ஊருக்கு ஏற்ப தீன், அவர்களுடைய ஜமாஅத்திற்கு ஏற்ப தீன், இல்லை சகோதரர்களே! தீன் ஒன்றே ஒன்றுதான்.

எதை அல்லாஹ், அவனுடைய தூதருக்கு இறக்கினானோ.

நபியே! உமக்கு உமது இறைவன் புறத்திலிருந்து இறக்கப்படுவதை மட்டும் நீங்கள் பின்பற்றுவீராக! இதைத் தவிர வேறு ஒன்றை பின்பற்றுவதற்கு, வேறு ஒன்றை எடுத்து நடப்பதற்கு முஸ்லிம்களாகிய நமக்கு அனுமதி இல்லை.

இந்த இஸ்லாமாகிய தூய மார்க்கம் தான் மிகச்சரியானது, மிகநேரானது, மிகநீதமானது, மிகநேர்மையானது, ஒழுக்கம் நிறைந்தது.

இதைத்தவிர உள்ள அனைத்தும், அதில் சில விஷயங்கள் கவர்ச்சியாக தெரிந்தாலும் நல்லதாக தெரிந்தாலும் அவை முழுமையாக ஆராய்ந்து பார்க்கும் போது மனிதனின் இம்மை மறுமை ஈடேற்றத்திக்கு பயன் தரக்கூடியதாக இருக்காது.

ஒன்று நன்றாக இருக்குமேயானால், இன்னொன்று மிக தீமையாக இருக்கும். ஒன்றில் பயன் இருக்குமேயானால், இன்னொன்றில் மிகப்பெரும் கெடுதி இருக்கும். ஒன்றில் மனிதர்களுக்கு சில நன்மைகள் இருக்குமேயானால், மற்றொன்றில் மிகப்பெரிய ஆபத்து இருக்கும்.

இஸ்லாமைத் தவிர நீங்கள் எந்தக்கொள்கை, கோட்பாடு, சமயம், வழிபாட்டு முறையோ, அல்லது வாழ்க்கை முறையோ எடுத்துக் கொண்டால் நிச்சயமாக அவை அப்படித்தான் இருக்கும்.

இஸ்லாம் ஒன்று மட்டும்தான் அதனுடைய அனைத்து அம்சங்களும் நேர்மையானது. அதனுடைய அனைத்து அம்சங்களும் நீதமானது. ஒழுக்கம் நிறைந்தது. பாதுகாப்பு நிறைந்தது.

காரணம், படைத்த ரப்புல் ஆலமீன் இதை இறக்கி இருக்கிறான். படைத்த ரப்புல் ஆலமீன் படைப்பினங்களின் தன்மைகளை அறிந்தவன். காலங்களில் மாற்றங்களை அறிந்தவன். மனிதர்களின் சுபாவங்களை அறிந்தவன்.

وَأَنَّ هَذَا صِرَاطِي مُسْتَقِيمًا

எனது இந்த பாதைதான் நேரான பாதை, சரியான பாதை.

இத்தோடு அல்லாஹு ரப்புல் ஆலமீன் அவனுடைய கட்டளையை முடித்தானா? இந்த வார்த்தையைச் சொன்னாலே போதுமானது.

ஆனால் அல்லாஹ் ரப்புல் ஆலமீன் இத்தோடு நமக்கு வலியுறுத்துகிறான் பாருங்கள்,

فَاتَّبِعُوهُ

இதையே நீங்கள் பின்பற்றுங்கள். இதுதான் நேரானது, இதுதான் நேர்மையானது, இதுதான் சரியானது என்று சொன்னால், அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும் அதை பின்பற்ற வேண்டும்.

அல்லாஹ் ரப்புல் ஆலமீன் அதையும் நமக்கு சொல்கிறான். இதை நீங்கள் பின்பற்றுங்கள், நேர்மையானதை, நீதமானதை, ஒழுக்கம் நிறைந்ததை, பாதுகாப்பு நிறைந்ததை பின்பற்றவில்லை என்றால் மனிதன் வேறு எதை பின்பற்றுவான்? சொல்லுங்கள் பார்க்கலாம்.

பிறகுசொல்கிறான்;

وَلَا تَتَّبِعُوا السُّبُلَ

இதைத் தவிர வேறு எந்த பாதைகளையும் நீங்கள் பின்பற்றாதீர்கள். இதைத் தவிர வேறு எந்த வழிகளிலும் செல்லாதீர்கள். எவ்வளவு அழுத்தத்தை அல்லாஹ் கொடுக்கிறான்.

எங்கே மிகப்பெரிய ஒரு உண்மையை அந்த உண்மையை மறுத்தால், அந்த உண்மையை நிராகரித்தால், அந்த உண்மையை புறக்கணித்தால், மாபெரும் சீரழிவு சீர்கேடு ஏற்படுமோ, அதுபோன்ற இடங்களில்தான் இவ்வளவு அழுத்தமாக ஆணித்தரமாக தெள்ளத்தெளிவாக அல்லாஹ் குறிப்பிடுகிறான் சகோதரர்களே!

இதுதான் எனது நேரான நீதமான பாதை. இதை நீங்கள் பின்பற்றுங்கள். இதைத் தவிர வேறு எந்த வழிகளாக இருக்கட்டும், யாருடைய கலாச்சாரமாக இருக்கட்டும், எவ்வளவு பெரிய ஞானியாக, தத்துவ சிந்தனைவாதியாக அல்லது புரட்சிக்காரர் ஆக இருக்கட்டும் வேறு எந்த பாதைகளையும் நீங்கள் பின்பற்றி விடாதீர்கள்.

மேலும் அல்லாஹ் சொல்கிறான்,

فَتَفَرَّقَ بِكُمْ عَنْ سَبِيلِهِ

அப்படி நீங்கள் எனது இந்த ஒரு நேரான, நேர்மையான பாதையை விட்டு, வேறு பாதைகளில் சென்றால், நீங்கள் உங்கள் ரப்பை அடைய முடியாது. சொர்க்கத்தை அடைய முடியாது. ஏன்? அல்லாஹ்வுடைய இஸ்லாம் என்ற நேரான, அந்த ஒரே ஒரு ஒப்புக் கொள்ளப்பட்ட பாதையிலிருந்து, அவை உங்களை பிரித்து விடும். அவை உங்களை வழிகெடுத்து விடும்.

பிறகு சொல்கிறான் பாருங்கள்.

ذَلِكُمْ وَصَّاكُمْ بِهِ لَعَلَّكُمْ تَتَّقُونَ

## பிற மத கலாச்சாரத்தை பின்பற்றாதீர்

இது ஒரு சாதாரணமான விஷயமாக நீங்கள் எடுத்துக் கொள்ளாதீர்கள். எவ்வளவு அழுத்தமாக சொல்கிறான் அல்லாஹ். என்றைக்காவது இதை சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா?

நம் மீது கருணை கொண்டு, நாம் வழி தவறி விடக்கூடாது, மன இச்சைகளை பின்பற்றி விடக்கூடாது, மாற்றார்களின் வழியில் சென்று விடக்கூடாது. அல்லாஹ்வின் எதிரிகளாகிய யூத, கிறிஸ்தவ, மஜூசிகளின் கலாச்சாரத்தில் கரைந்து விடக்கூடாது என்பதற்காக, அல்லாஹ் நமக்கு சொல்லக் கூடிய அந்த கண்டிப்பை பாருங்கள்.

இது ஒரு சாதாரணமான விஷயம் அல்ல. உங்கள் இறைவன், உங்களை படைத்த ரப்பு, நீங்கள் யாருக்கு ருகூஃ, சுஜூது, இபாதத்கள் செய்கிறீர்களோ, அந்தரப்பு உங்களுக்குச் சொல்லக்கூடிய அறிவுரை ஆகும்.

உங்களது ரப்பு உங்களைப் படைத்தவன், உங்களுக்கு இந்த அறிவுரையை சொல்கிறான். ஏன்? அப்பொழுதுதான் நீங்கள் ஒழுக்கமானவர்களாக, பரிசுத்தமானவர்களாக, தக்வா இறையச்சம் உள்ளவர்களாக, மார்க்கப்பற்று உடையவர்களாக இருப்பீர்கள்.

இவ்வளவு ஓர் ஆழமான, இவ்வளவு அழுத்தமான விஷயத்தை அல்லாஹ் சொல்கிறான். எனவேதான் அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் இந்த சூரா அஃராஃப் வரை உள்ள அத்தனை அத்தியாயங்களையும் முஹ்கமாத் என்று சொல்வார்கள்.

மீண்டும் மீண்டும் அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தொழுகையில் ஓதுவார்கள்; இரவுத் தொழுகையில் ஓதுவார்கள்; மக்களுக்கு இந்த வசனங்களையும் சூராக்களையும் கற்றுக் கொடுப்பார்கள்.

ஆனால் இன்று நம்மில் பெரும்பாலானவர்கள் இவற்றையெல்லாம் பெரிய சூராக்கள், என்று புறக்கணித்து அவற்றை ஓதுவதை கூட மறந்து இருப்பதை பார்க்கிறோம்.

அவற்றின் வசனங்களை சிந்திப்பது கூட அபூர்வமான விஷயமாக இருக்கிறது. அல்லாஹு ரப்புல் ஆலமீன் அவ்வளவு தெளிவாக சொல்கிறான்; இந்த முஷ்ரிக்குகள், இந்த யூதர்கள், இந்த கிறிஸ்தவர்கள் உங்களுக்கு எதிரிகள். என்னசெய்வார்கள்?

உங்களுடைய இஸ்லாமுடைய அடையாளத்திலிருந்து, உங்களுடைய இஸ்லாமுடைய வாழ்க்கை, அந்த கலாச்சாரத்திலிருந்து, நீங்கள் எப்படி தனித்து தெரிய வேண்டுமோ? அதில் இருந்து உங்களை பிரித்து எடுத்து, உங்களை அதிலிருந்து கழட்டி எடுத்து, உங்களை அதிலிருந்து வெளியேற்றி, தங்களது சமுதாயத்தில், ஒரு சமுதாயமாக நீங்கள் கரைகின்றவரை, கலக்கின்றனவரை, அவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள்.

அல்லாஹு ரப்புல் ஆலமீன் கூறுவதைப் பாருங்கள்;

وَلَا يَزَالُونَ يُقَاتِلُونَكُمْ حَتَّى يَرُدُّوكُمْ عَنْ دِينِكُمْ إِنِ اسْتَطَاعُوا وَمَنْ يَرْتَدِدْ مِنْكُمْ عَنْ دِينِهِ فَيَمُتْ وَهُوَ كَافِرٌ فَأُولَئِكَ حَبِطَتْ أَعْمَالُهُمْ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ وَأُولَئِكَ أَصْحَابُ النَّارِ هُمْ فِيهَا خَالِدُونَ

மேலும், (நம்பிக்கையாளர்களே! நிராகரிப்பாளர்களாகிய) அவர்களுக்குச் சாத்தியப்பட்டால் உங்களை உங்கள் மார்க்கத்திலிருந்து திருப்பி விடும்வரை உங்களை எதிர்த்து ஓயாது போர் செய்து கொண்டே இருப்பார்கள். ஆகவே, உங்களில் எவரேனும் தன் மார்க்கத்தை (நிராகரித்து)விட்டு மாறி, (அதை அவ்வாறு) நிராகரித்(ததைப் பற்றி வருத்தப்பட்டு மீளா)தவராகவே இறந்துவிட்டால் அவருடைய (நற்)செயல்கள் எல்லாம் இம்மையிலும் மறுமையிலும் அழிந்துவிடும். இன்னும், அவர்கள் நரகவாசிகளாகி, என்றென்றுமே அதில் தங்கி விடுவார்கள். (அல்குர்ஆன் 2 : 217)

ஒரு முஸ்லிம் அவனுடைய கொள்கையால் அவனது வணக்க வழிபாட்டால் அவனுடைய கலாச்சாரத்தால் முஸ்லிமாக தெரிந்து விடக்கூடாது என்பதற்காக, உங்கள் மீது அவர்கள் போரேதொடுப்பார்கள்.

இதற்காக முடிந்த அளவு அவர்கள் முயற்சி செய்து கொண்டே இருப்பார்கள். அல்லாஹ் எச்சரிக்கை செய்கிறான் பாருங்கள்.

அவர்களுடைய இந்த போராட்டத்தில், அவர்களின் இந்த தாக்குதல்களில், யாரொருவர் சிக்கிக்கொண்டு, தனது மார்க்கத்தை விட்டு விலகி விடுவாரோ, தனது மார்க்கத்தைவிட்டு வெளியேறிவிடுவாரோ, இன்னும் காஃபிரான நிலையிலேயே, அல்லாஹ்வை நிராகரித்த நிலையிலேயே இறந்து விடுவானோ அவர்கள் செய்த அமல்கள் துன்யாவிலும் நாசமாகிவிடும். மறுமையிலும் நாசமாகிவிடும். இவர்கள் நரகவாதிகள். நரகத்தில் நிரந்தரமாக இருப்பார்கள்.

கண்ணியத்திற்குரியவர்களே! அல்லாஹு ரப்புல் ஆலமீன் இந்த விஷயத்தை வேதத்தை இறக்கிய காலத்திலேயே தெளிவுபடுத்திவிட்டான். இந்த யூதர்கள், முஷ்ரிக்குகள், மஜூஸிகள் இவர்கள், ஒருவரை அவருடைய இஸ்லாமிய அடையாளத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு முயற்சி செய்வார்கள். லா யிலாஹ இல்லல்லாஹ் விலிருந்து வெளியேற்ற முயற்சி செய்வார்கள்.

அவர்களுடைய அந்த ஷஹாதாவில் இருந்து வெளியேற்ற முயற்சி செய்வார்கள். நீ எல்லா சுகங்களையும், எல்லா இன்பங்களையும் அனுபவிக்கலாம். இந்த லா யிலாஹ இல்லல்லாஹ்வைவிட்டு, இந்த இஸ்லாம் என்ற அந்த வட்டத்திலிருந்து நீ வெளியேறி விட்டால் என்று முஸ்லிம்களுக்கு ஆசை ஊட்டுவார்கள்.

பொருளாதார ஆசை ஊட்டுவார்கள், பெண்களின் ஆசை ஊட்டுவார்கள், சுகபோக வாழ்க்கையின் ஆசை ஊட்டுவார்கள், முடிந்தால் அதற்காக ஆயுதம் ஏந்தியும் தாக்குதல் நடத்துவார்கள்.

அப்படி ஆயுதமேந்தி தாக்க முடியவில்லை என்று சொன்னால், வேறு வழிகளில் அவர்களுடைய சிந்தனையை, இஸ்லாமிய சிந்தனையிலிருந்து, ஷஹாதாவின், ஈமானின் பற்றில் இருந்து அவர்களை வெளியேற்றிக் கொண்டு, ஷிர்க்கை நேசிப்பவன் ஆக, குஃப்ரு - இறை நிராகரிப்பை நேசிப்பவன் ஆக, அந்த அசிங்கங்களை அவர்களுடைய அந்த அனாகரிகமான கலாச்சாரத்தை நேசிக்கக் கூடியவர்களாக மாற்ற முயற்சிப்பார்கள்.

அன்பிற்குரியவர்களே! இது சாதாரணமான போர் அல்ல. வாளேந்தி போர் செய்வதை விட வெளிரங்கமாக படையை எடுத்துக் கொண்டு தாக்குதல் நடத்துவதை விட, மிக மோசமான தாக்குதல் இந்த மறைமுகமான தாக்குதல்.

ஏன்? வெளிரங்கமான தாக்குதலின் காரணமாக நம்முடைய கை கால் உடல் உறுப்புகள் அல்லது உயிர்கள்தான் சேதம் அடையும்.

ஆனால் அவர்களுடைய இந்த கலாச்சார தாக்கத்தால், அவர்களுடைய இந்த கலாச்சார போரால் பாதிப்படைய கூடியது நம்முடைய கல்பு சகோதரர்களே.

நம்முடைய உள்ளங்களை அல்லாஹ் பாதுகாப்பானாக! நம்முடைய உள்ளங்களை அல்லாஹ் சீர்படுத்துவானாக! இந்த கல்பில், அல்லாஹ்வின் தூதரின் மீது நேசம், அவர்களுடைய கலாச்சாரத்தின் மீது நேசம், அவர்கள் வாழ்ந்த அந்த வாழ்க்கைக் கலையின் மீது நேசம், அவர்களுடைய அந்த இஸ்லாமிய வாழ்வியலின் மீது நேசம் இருக்குமேயானால், நாம் அவற்றில் சிலவற்றை விட்டாலோ, அல்லது சிலவற்றில் குறைவு செய்தால் கூட அல்லாஹ் மன்னிக்கப் போதுமானவன்.

ஆனால் சகோதரர்களே! இந்த உள்ளத்திலே அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய ஹதீஸ் இன்னும் அவர்களுடைய கலாச்சாரத்தின் மீது வெறுப்பு ஏற்பட்டு விடுமேயானால், இஸ்லாமிய அந்த வாழ்க்கையின் மீது, இஸ்லாமிய மார்க்கத்தின் செயல்பாட்டின் மீது வெறுப்பு ஏற்பட்டு விடுமேயானால், அதை பார்க்கும் போது கோபம் என்ற அந்த ஒரு விதமான போக்கு ஏற்பட்டு விடுமேயானால், -அல்லாஹ் பாதுகாக்க வேண்டும்- அதற்குப் பிறகு இவனுடைய ஈமானே பிரயோஜனம் அளிக்காது.

ஏன் தெரியுமா? யார் அல்லாஹ்வின் தூதரை வெறுப்பார்களோ, அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய சுன்னாவை வெறுப்பார்களோ, அவர்களுடைய ஷஹாதா பலனளிக்காது. அவர்களுடைய ஈமான் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படாது.

இந்த ஒரு செயலைத்தான் தங்களது கல்விகளின் மூலமாக, தங்களது வேலை வாய்ப்புகளின் மூலமாக, தொழில் துறைகளின் மூலமாக, ஊடகங்களின் மூலமாக, இன்னும் நாம் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு எல்லா துறைகளிலும் இன்றைய அந்த மாற்றார்கள் யூதர்கள், கிறிஸ்தவர்கள், மஜூஸிகள் இவர்கள் எல்லாம் முஸ்லிம்கள் மீது எத்தகைய தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

கலாச்சார ரீதியாக தாக்குதல். ஒரு முஸ்லிமுடைய கல்பில், அவனுடைய இஸ்லாமிய பற்று பலவீனமடைய வேண்டும். அவர்களுடைய வாழ்வியல் கலாச்சாரத்தின் மீது அவர்களுக்கு ஒரு விதமான தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு விடவேண்டும். அவர்களுக்கு அதன் மீது ஒரு விதமான வெறுப்பு ஏற்பட்டு விடவேண்டும் என்பதற்காக பாடுபடுகிறார்கள்.

அல்லாஹ்வின் எதிரிகளை ஹீரோக்களாக, அவர்களை ஒரு முன்மாதிரியாக, அவர்களை திறமையானவர்களாக, சிந்தனைவாதிகளாக, அவர்களை மிகப்பெரிய ஒரு முற்போக்குவாதிகளாககாட்டி, அவர்களின் மீது அன்பை ஏற்படுத்துவது. அவர்களை மதிக்கவைப்பது.

அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக ஆடையிலும் அலங்காரத்திலும், வாழ்வியலிலும் வாழ்க்கையிலும், அவர்களுடைய கலாச்சாரத்தை அப்படியே ஒரு முஸ்லிமுடைய வாழ்க்கையில் கொண்டுவருவது.

அரபியில் ஒரு பழமொழி கூறுவார்கள்;

ان المحب لمن يحب مطيع

நீங்கள் யாரை நேசிக்கிறீர்களோ, அவர் பின்னால்தான் நீங்கள் செல்வீர்கள். உங்களுக்கு யார் மீது விருப்பம் இருக்கிறதோ, அவரை நீங்கள் கண்டிப்பாக பின்பற்றுவீர்கள். அவர் உங்களை பின்பற்ற சொல்லவில்லை என்றாலும் சரி, அவர் பின்னால்தான் செல்வீர்கள்.

இதைத்தான் ஏற்படுத்துகிறார்கள். அல்லாஹ்வின் மீது, அல்லாஹ்வின் தூதரின் மீது, சத்திய சஹாபாக்களின் மீது உண்டான முஹப்பத் எப்படி வரும்? அவர்களைப்பற்றி அறிவதற்கு பேசுவதற்கு, அவர்களுடைய கலாச்சாரத்தை தெரிந்து கொள்வதற்கு நம்மிடத்தில் நாம் என்ன வைத்திருக்கிறோம்?

ஏதோ ஜும்ஆவிலோ அல்லது எங்கேயாவது ஓரிடத்தில் நடக்கின்ற, அந்த ஒரு சில மணித்துளிகளில் நிகழ்ச்சிகளைத் தவிர. நமது குடும்பத்தில் நமது பள்ளிக்கூடத்திலே நமது வியாபாரதலங்களிலே நமக்கு என்ன அமைப்பு இருக்கிறது அதை பற்றி பேசுவதற்கு? குர்ஆனைப் பற்றிஹதீஸை பற்றி இஸ்லாமிய மார்க்கத்தை பற்றி அந்த வாழ்வியலைப்பற்றி அறிமுகப்படுத்துவதற்கு சொல்வதற்கு போதிப்பதற்கு, இங்கே பார்ப்போம் என்று சொன்னால் மிகவும் அதிகமான நிலையில் இருக்கின்றோம்.

பார்ப்பதெல்லாம் எது? எந்த ஒன்றாக இருந்தாலும் சரி, முஸ்லிம்களும் கூட, தங்களுடைய வியாபாரதளங்களில் ஆடை அலங்காரங்களுக்கு, அவர்களுடைய தொழில்களுக்கு அவர்கள் முன்னிலைப்படுத்துவது எல்லாம், மாற்றாரின் அந்த கலாச்சாரத்தைதான்.

ஆகவே, அவர்கள் காண்பிக்கப்பட்டு, அவர்களைப்பற்றி பேசப்பட்டு, ஒரு முஸ்லிமுடைய உள்ளத்திலே அவர்களின் மீது நேசம் ஏற்படுகிறது. எனவே இவன் என்ன செய்கிறான்? அவர்களைப் போன்று உடை அணிய ஆரம்பிக்கிறான். அவர்களைப் போன்று முகத்தை மாற்றிக் கொள்கிறான்.

முஸ்லிம் பெண்கள், அவர்களை போன்று ஆடை அணிய அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். விரும்புகிறார்கள். இப்படி கொஞ்சம் கொஞ்சமாக முதலில் இஸ்லாமிய முஸ்லிம்களுக்கு என்று இருந்த ஆடை, முஸ்லிம்களுடைய அந்தக் கலாச்சாரம் அது பாதித்தது. காஃபிர்களின் கலாச்சாரம் முற்றிலுமாக முஸ்லிம்களுக்குள்ளே நுழைந்து, முஸ்லிம் காஃபிர் என்று பிரித்துப் பார்க்க முடியாத ஒரு ஆடையை அவர்கள் ஏற்படுத்தினார்கள்.

பிறகு முஸ்லிம்களுடைய முகத்தில் தாடி சென்றது. பிறகு முஸ்லிம் பெண்களின் புர்கா சென்றது. பிறகு அதுவும் மாடர்ன் மாடர்ன் ஆக, இன்று எவ்வளவு பெரிய கலாச்சார சீரழிவில் ஒரு காஃபிரை போன்று வாழக்கூடிய பல முஸ்லிம்களை பார்த்துக் கொண்டிருக்கிறோம் சகோதரர்களே.

அல்லாஹு தஆலா தன் வேதத்தில் இதை இன்னும் தெளிவாக சொல்கிறான்;

وَدُّوا لَوْ تَكْفُرُونَ كَمَا كَفَرُوا فَتَكُونُونَ سَوَاءً فَلَا تَتَّخِذُوا مِنْهُمْ أَوْلِيَاءَ حَتَّى يُهَاجِرُوا فِي سَبِيلِ اللَّهِ

(நம்பிக்கையாளர்களே!) அவர்கள் நிராகரிப்பவர்களாகி விட்டபடியே நீங்களும் நிராகரிப்பவர்களாகி அவர்களுக்கு சமமாகிவிடுவதை அவர்கள் விரும்புகிறார்கள். ஆகவே, (தங்கள் இல்லங்களைவிட்டு) அல்லாஹ்வுடைய பாதையில் அவர்கள் வெளியே புறப்படும் வரை நீங்கள் அவர்களை நண்பர்களாக எடுத்துக்கொள்ள வேண்டாம். (அல்குர்ஆன் 4 : 89)

அவர்கள் எப்படி காஃபிர்களாக இருக்கிறார்களோ, அது போன்று நீங்களும் காஃபிராக மாறி, அவர்களோடு நீங்களும் சமமாக கலந்து விடவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அல்லாஹு ரப்புல் ஆலமீன் சொன்ன அந்த கூற்றை பாருங்கள் இன்று நமது வாழ்க்கையில் எவ்வளவு எதார்த்தமாக பார்க்கிறோம்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சொன்னார்கள்;

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ لَتَتْبَعُنَّ سَنَنَ مَنْ كَانَ قَبْلَكُمْ شِبْرًا شِبْرًا وَذِرَاعًا بِذِرَاعٍ حَتَّى لَوْ دَخَلُوا جُحْرَ ضَبٍّ تَبِعْتُمُوهُمْ قُلْنَا يَا رَسُولَ اللَّهِ الْيَهُودُ وَالنَّصَارَى قَالَ فَمَنْ (صحيح البخاري – 6775)

முந்திய மக்களின் கலாச்சாரத்தில், நீங்கள் சீரழிவீர்கள். அவர்களை நீங்கள் ஜானுக்கு ஜான், முழத்துக்கு முழம் என்று அவர்களை அப்படியே காப்பி அடிப்பீர்கள். அவர்களில் ஒருவன் ஒரு உடும்பின் பொந்துக்குள் சென்றால் நீங்களும் அதற்குள் நுழைய முயற்சிப்பீர்கள்.

அறிவிப்பாளர்: அபூ சயீத் அல்குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல்: புகாரி, எண்: 6775.

எவ்வளவு கேவலம் பாருங்கள். இவ்வாறு தானே இன்று அவன் எப்படி தலையை சரிக்கிறானோ, எப்படி முடி வைக்கிறானோ, எப்படி ஆடைகளை கிழித்து கொள்கிறானோ, ஒழுங்கீனமான கேவலமான ஆடைகளை அணிகிறானோ, அதுபோன்று முஸ்லிம் வாலிபன் அணிய முயற்சிக்கிறான்.

அந்தப் பெண்கள் எப்படி அசிங்கமான கேவலமான ஆடைகளை அணிய நினைக்கிறார்களோ, அதேபோன்று முஸ்லிம் பெண்கள் அணிய நினைக்கிறார்கள்.

ஒரு உடும்புப் பொந்தில் அவன் சென்றால், நீங்களும் செல்ல முயற்சிப்பீர்கள். அல்லாஹ் பாதுகாக்க வேண்டும்! அப்போது நபித்தோழர்கள் கேட்டார்கள்; அல்லாஹ்வின் தூதரே! யூத கிறிஸ்தவர்கள் குறித்தா நீங்கள் சொல்கிறீர்கள்? இவர்களைத் தவிர வேறு யாரை நான் குறிப்பிடப் போகிறேன்.

அறிவிப்பாளர்: அபூ சயீத் அல்குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல்: புகாரி, எண்: 6775.

இன்று சினிமாக்களிலும் சரி, சீரியல்களிலும் சரி அத்தனை கலாச்சார சீரழிவை யார் அறிமுகப்படுத்துகிறார்கள்? ஆடை வடிவங்களாக இருக்கட்டும், அத்தனை வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் எதை அவர்கள் அறிமுகப்படுத்துகிறார்களோ, அதுதான் லைப்ஸ்டைல். அதுதான் கலாச்சாரமாக, அதுதான் முன்னேறிய வாழ்க்கையாக, அதுதான் மக்களுக்கு அட்வான்ஸாக, லேட்டஸ்ட் மாடல் ஆக மக்கள் பேசிக்கொள்கிறார்கள். அல்லாஹ் பாதுகாக்கவேண்டும்!

கண்ணியத்திற்குரியவர்களே! இப்படி நாம் பார்க்கும் போது ஏறக்குறைய ஏழு எட்டு முக்கியமான விஷயங்களை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். மாற்றார்களின் கலாச்சாரத்தால், முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அந்த தாக்கத்தில் ஒன்றுதான் ஒவ்வொரு முஸ்லிமும் அவன் தனக்கென்று ஒன்றை வைத்துக்கொண்டு, அதிலே பெருமை அடிப்பது.

எனது ஊர் என்று பெருமை அடிப்பது, எனது நாடு என்று பெருமை அடிப்பது, عصبية -அசபியா என்று அல்லாஹ்வுடைய தீனில் சொல்லப்படும் மிக கேவலமான ஒன்று. நாட்டுப்பற்று என்ற பெயரில், ஊர்ப்பற்று என்ற பெயரிலே, குடும்பம் என்ற பெயரிலே, கோத்திரம் என்ற பெயரிலே பேசப்படக் கூடிய அத்தனையும் சரி அல்லாஹ்வால் வெறுக்கப்பட்ட ஒன்று.

அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சொல்வதை பாருங்கள்;

عَنْ جُبَيْرِ بْنِ مُطْعِمٍ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ لَيْسَ مِنَّا مَنْ دَعَا إِلَى عَصَبِيَّةٍ وَلَيْسَ مِنَّا مَنْ قَاتَلَ عَلَى عَصَبِيَّةٍ وَلَيْسَ مِنَّا مَنْ مَاتَ عَلَى عَصَبِيَّةٍ (سنن أبي داود – – 4456)

யாரிடத்தில் இப்படிப்பட்ட ஒரு தவறான பிடிப்பு இருக்கிறதோ, இதற்கு இனவாதம் என்று சொல்லலாம், மொழிவாதம் என்று சொல்லலாம், சில மக்களை நீங்கள் பார்த்தீர்கள் என்றால், ஒரு சங்கம் வைத்துக் கொள்வார்கள். அந்த சங்கத்திற்கு அவர்களுடைய ஊர் பெயரை வைத்துக் கொள்வார்கள். கேட்டால் இது எங்க ஊருக்கு உள்ள சங்கம். எங்க ஊர் மக்கள் மட்டும்தான் இதில் மெம்பராக உறுப்பினராக இருக்க முடியும். எங்கள் ஊர் மக்களுக்கு மட்டும்தான் நாங்கள் நன்மை செய்வோம், சதக்கா கொடுப்போம், தர்மம் கொடுப்போம்.

இப்படி எல்லாம் வைத்துக் கொண்டு முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரிவினை செய்வதைத்தான் அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சொன்னார்கள், யார் இப்படி அஸபியாவின் பக்கம் அழைக்கிறானோ, அவன் நம்மை சார்ந்தவனல்ல. யார் இந்த அசபியா இனவாதத்திற்காக போரிடுகிறானோ, அவனும் நம்மை சார்ந்தவனல்ல. யார் இந்த இனவாதத்தின் மீது மரணிக்கிறானோ, அவனும் நம்மை சார்ந்தவனல்ல.

அறிவிப்பாளர்: ஜுபைர் இப்னு முத்யிம் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: அபூ தாவூத், எண்: 4456.

அடுத்து சகோதரர்களே! பெண்களுடைய இன்றைய கலாச்சார சீரழிவு, இது குறித்து அல்லாஹு ரப்புல் ஆலமீன் குர்ஆனிலே கூறுகிறான்;

وَلَا تَبَرَّجْنَ تَبَرُّجَ الْجَاهِلِيَّةِ الْأُولَى

பெண்களின் ஆடை அலங்காரங்களின் அந்த மோசமான நிலையைக் குறிப்பிடும் போது, காஃபிர்களின் காலத்திலே, ஜாஹிலியாவின் காலத்திலே அந்தப் பெண்கள் எப்படி ஆடை அணிந்து அநாகரிகமாக அணிந்து கொண்டு வெளியே சுற்றித் திரிந்தார்களோ, முஸ்லிம் பெண்களே! நபியின் மனைவிகளே! நீங்களும் அப்படி திரியாதீர்கள் என்று. (அல்குர்ஆன் 33 : 33)

இன்று நமது குடும்பங்களில் அல்லாஹ் பாதுகாக்க வேண்டும். எத்தனை பெண்கள் ஹிஜாப் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். ஹிஜாப் இருந்தாலும் அதை ஒரு சின்ன பேருக்காக வைத்துக் கொண்டு, அதிலே அவர்களுடைய கலாச்சார சீரழிவுகளை பார்க்கிறோம் சகோதரர்களே!

இது மிகப்பெரிய சீரழிவு. காரணம் என்ன? ஒரு பெண் ஒரு முஸ்லிமுடைய குடும்பத்திலே முஸ்லிமுடைய மஹல்லாவில் கெட்டுவிட்டால் போதும் அவளுடைய கணவனே கெடுக்க, குடும்பத்தை கெடுக்க, தான் பெற்ற பிள்ளைகளை கெடுக்க அவள் ஒருத்தியே போதுமானவள்.

எனவே பெண்களினால் ஏற்படக்கூடிய அந்த கலாச்சார சீரழிவு மிகச்சாதாரணமானது அல்ல. அது போன்று தான் அந்த காஃபிர்கள் ஒவ்வொரு நாளை ஏற்படுத்திக் கொண்டு, அந்தநாட்களுக்கு ஒரு பெயர் சூட்டி அதை ஒரு விழாவாகக் கொண்டாடுவது, இன்னும் சில நாட்களில் நீங்கள் பார்த்தால் நியூ இயர் என்று ஒன்றை கொண்டாடுவார்கள். எந்த ஆண்டுக்கும் நமக்கும் சம்பந்தம் இல்லையோ, அந்த ஒரு ஆண்டை கொண்டு அதனுடைய தொடக்கத்தை ஒரு ஹேப்பி நியூ இயர் என்று முஸ்லிம்கள் தங்களுக்கு மத்தியில் பரிமாறிக்கொள்வது, அல்லது அதை காஃபிர்களுக்கு சொல்வதைப் பார்க்கிறோம்.

இன்னும் இதைப்போன்று எத்தனை நாட்களை, டீச்சர்ஸ் டே என்று வைத்துக் கொள்கிறார்கள், பேரன்ஸ் டே, இப்படி அடுக்கிக் கொண்டே போனால், ஒரு ஆண்டுக்கு எத்தனையோ நாட்கள் அதை ஒரு பெருநாளாக, அதில் மக்களுக்கு மத்தியில் வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையைப் பார்க்கிறோம்.

இன்று முஸ்லிம்கள் கூட ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய பேரில் பிறந்தநாள் விழா கொண்டாடுகிறார்கள். இது எங்கிருந்து வந்தது. இது முழுக்க முழுக்க நசாராக்கள், கிறிஸ்தவர்களுடைய கலாச்சாரம். அவர்கள் தங்களுடைய நபிக்கு பிறந்தநாள் விழா கொண்டாடினார்கள். அப்போது சில அறியாத முஸ்லிம்கள் நினைத்தார்கள், நாங்கள் மட்டும் என்ன சளைத்தவர்களா? நாங்களும் எங்கள் நபிக்கு பிறந்தநாள் விழா கொண்டாடுவோம் என்று.

இப்படித்தான் மார்க்கத்திலே எதை அல்லாஹ்வும் அல்லாஹ்வுடைய தூதரும் முஸ்லிம்களுக்கு விசேஷ நாளாக ஆக்கினார்களோ, அந்த நாட்களைத் தவிர, வேறு எந்த ஒரு நாளாக இருக்கட்டும், முஸ்லிம்களுடைய மாதமாகிய, முஸ்லிம்களுடைய ஆண்டாகிய ஹிஜ்ரா ஆண்டின் தொடக்கமாக இருக்கட்டும். முஹர்ரம் மாதத்தின் ஆரம்பத்தில் கூட சில முஸ்லிம்கள் வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்வதைப் பார்க்கிறோம். இதற்கு நமது மார்க்கத்தில் அனுமதி இல்லை சகோதரர்களே.

மிஃராஜ் உடைய இரவு என்று, பராஅத் உடைய இரவு என்று, இன்னும் எப்படியோ பல இரவுகளை, ஒரு நாட்களை, அதை ஒரு சம்பிரதாயமாக, அதை ஒரு சடங்காக பெருநாட்களாக ஆக்கிக் கொள்கிறார்கள்.

ஈதுல்ஃ பித்ரு, ஈதுல் அல்ஹா என்ற இரண்டு நாட்களைத் தவிர, வேறு ஒன்றையும் பெருநாட்களாக, ஒரு மகிழ்ச்சிக்குரிய நாளாக ஆக்கிக் கொள்வதற்கு நமக்கு அனுமதியில்லை.

அல்லாஹ் கூறுவதை கவனியுங்கள்;

وَالَّذِينَ لَا يَشْهَدُونَ الزُّورَ وَإِذَا مَرُّوا بِاللَّغْوِ مَرُّوا كِرَامًا

இன்னும், எவர்கள் பொய் சாட்சி சொல்லாமலும் (வீணான காரியம் நடைபெறும் இடத்திற்குச் செல்லாமலும்) ஒருக்கால் (அத்தகைய இடத்திற்குச்) செல்லும்படி ஏற்பட்டு விட்டபோதிலும் (அதில் சம்பந்தப்படாது) கண்ணியமான முறையில் (அதைக் கடந்து) சென்று விடுவார்கள். (அல்குர்ஆன் 25 : 72)

முஸ்லிம்கள் யார் தெரியுமா? முஃமின்கள் யார் தெரியுமா? அவர்கள் பொய்யான விஷயங்களில் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று அல்லாஹ் சொல்வது எதை பற்றி தெரியுமா? சலஃப்களில் ஒரு பெரும் அறிஞர்களின் கூட்டம் சொல்கிறார்கள்;

காஃபிர்களின் பெருநாட்களில் இவர்கள் கலந்து கொள்ளமாட்டார்கள். காஃபிர்களின் அந்த சடங்குகளின் நாட்களில் இவர்கள் கலந்து கொள்ளமாட்டார்கள். இன்று முஸ்லிம்களுக்கு மத்தியிலும் இந்த ஒரு கலாச்சாரம் மாறிக்கொண்டு பரவிக்கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம்.

அது போன்றுதான் ஆடை அலங்காரங்களில் அந்த காஃபிர்களை போன்று ஆடை அணிவது, அவர்களுடைய ஆடைகளை பெருமையாக கருதுவது.

அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஒரு முறை ஒரு மனிதனை பார்த்தார்கள். காஃபிர்கள் அணியக்கூடிய ஒரு குறிப்பிட்ட கலரில், மஞ்சள் நிறத்தில் சாயம் பூசப்பட்ட ஒரு நிற ஆடை, அவர்களுடைய மத சடங்குகளுக்காக அணியக்கூடிய அந்த ஆடை. அந்த துணியிலே ஆடை செய்து முஸ்லிம்களில் ஒருவர் அணிந்திருந்தார்.

நாம் இதை ஒரு சாதாரணமாக எடுத்துக் கொள்வோம். ஆனால், அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உடனே கூறினார்கள்;

إِنَّ هَذِهِ مِنْ ثِيَابِ الْكُفَّارِ فَلَا تَلْبَسْهَا

இது காஃபிர்களின் ஆடை, எனவே நீ இதை அணியாதே.. என்று அந்தத் தோழருக்கு எச்சரிக்கை செய்கிறார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: முஸ்லிம், எண்: 3872.

ஒரு நிறத்தில் என்ன வந்து விடப்போகிறது? எதை அவர்கள் தங்களின் மதச்சடங்காக, தங்களுக்கு என்று ஒரு அடையாளமாக வைத்திருக்கிறார்களோ, அந்த நிறத்தைக் கூட, அந்த நிறத்தில் உள்ள ஆடைகளை நீங்கள் அணியக்கூடாது என்று அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கண்டிக்கிறார்கள்.

ஸஹிஹுல் முஸ்லிமில் இன்னும் ஒரு அறிவிப்பை பாருங்கள். உமர் (ரலி) அன்ஹு அவர்களுடைய காலத்தில், அல்லாஹு ரப்புல் ஆலமீன் இஸ்லாமுக்கு விரிவான வெற்றியைத் தருகிறான். விசாலமான வெற்றியைத் தருகிறான். அங்கே சஹாபாக்கள் குடியேறுகிறார்கள். சஹாபாக்களின் மாணவர்கள் குடியேறுகிறார்கள். அபூ உஸ்மான் அண்ணஹ்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அறிவிக்கிறார்கள்;

3857 عَنْ أَبِي عُثْمَانَ قَالَ كَتَبَ إِلَيْنَا عُمَرُ وَنَحْنُ بِأَذْرَبِيجَانَ يَا عُتْبَةُ بْنَ فَرْقَدٍ إِنَّهُ لَيْسَ مِنْ كَدِّكَ وَلَا مِنْ كَدِّ أَبِيكَ وَلَا مِنْ كَدِّ أُمِّكَ فَأَشْبِعْ الْمُسْلِمِينَ فِي رِحَالِهِمْ مِمَّا تَشْبَعُ مِنْهُ فِي رَحْلِكَ وَإِيَّاكُمْ وَالتَّنَعُّمَ وَزِيَّ أَهْلِ الشِّرْكِ وَلَبُوسَ الْحَرِيرَ

தன்னுடைய படைக்குக் கமாண்டராக இருந்த அந்த தோழருக்கு உமர் அவர்கள் எழுதுகிறார்கள். உத்பாவே! நீ எப்படி சாப்பிடுகிறாயோ, அது போன்ற உணவை உனது படையில் உள்ள அத்தனை வீரர்களுக்கும் கொடு. நீ அந்த செல்வங்களை அவர்களில் இருந்து தடுத்துக் கொள்ளாதே.

இந்த செல்வத்தை நீ சம்பாதித்தது கிடையாது. உனது தந்தை சம்பாதித்தது கிடையாது. உனது தாய் சம்பாதித்தது கிடையாது. நீ என்ன உணவை சாப்பிடுகிறாயோ, அதே உணவை எல்லா முஸ்லிம்களுக்கும் கொடு.

பிறகு சொல்கிறார்கள்; ஆடை அலங்காரங்களிலும் சரி, வாழ்க்கையிலும் சரி, சுகபோகத்தை நீ ஒரு போதும் எதிர்கொள்ளாதே. ஆடம்பரமான வாழ்க்கையிலிருந்து உன்னை எச்சரிக்கை செய்கிறேன்.

முஷ்ரிக்குகளின் ஆடைகளைப் போன்று, அவர்களின் கலாச்சாரத்தை போன்று, நீங்கள் உங்கள் கலாச்சாரத்தை மாற்றிக் கொள்ளாதீர்கள். அதிலிருந்து நான் உங்களை எச்சரிக்கை செய்கிறேன் என்று உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த ஸஹாபிக்கு எச்சரிக்கை செய்து அனுப்புகிறார்கள்.

காரணம் என்ன தெரியுமா? நமது தொழுகை நமது மஸ்ஜிதிற்குள் அடங்கிவிடுகிறது. நமது நோன்பு நம்முடைய உடலுக்குள் அடங்கிவிடுகிறது. நம்முடைய ஜகாத் நம்முடைய வணக்க வழிபாடுகள் எதுவாக இருந்தாலும் அது நமக்குள் அடங்கிவிடுகிறது.

வெளியில் ஒருவன் முஸ்லிம் என்று அறியப்பட வேண்டும் என்றால் அவனுக்கு என்று இருக்கக்கூடிய விசேஷமான கலாச்சாரத்தை கொண்டுதான் அவன் முஸ்லிம் என்று அறியப்படுவான். அவன் ஒரு முஷ்ரிக் உடைய கலாச்சாரத்தில் கலந்துவிட்டால், அவனுடைய இபாதத் அவனை பிரித்து அறிவிக்காது. அவனுடைய நோன்பு அவனை பிரித்து அறிவிக்காது. பார்ப்பதற்கு அவன் ஒரு முஷ்ரிக்காகவே இருப்பான்.

அது போன்று தான் சகோதரர்களே! இன்று நம்முடைய முஸ்லிம் பெண்களுக்கு மத்தியிலும், சில ஆண்களுக்கு மத்தியிலும், பரவி இருக்கக்கூடிய கலாச்சாரம் இந்த பியூட்டி பார்லர் கலாச்சாரம். அங்கே சென்று தங்களது முகங்களை தங்களது முடிகளை தங்களது அந்த அலங்காரங்களை செய்து கொள்வது, இது குறித்தும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நமக்கு எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ صِنْفَانِ مِنْ أَهْلِ النَّارِ لَمْ أَرَهُمَا قَوْمٌ مَعَهُمْ سِيَاطٌ كَأَذْنَابِ الْبَقَرِ يَضْرِبُونَ بِهَا النَّاسَ وَنِسَاءٌ كَاسِيَاتٌ عَارِيَاتٌ مُمِيلَاتٌ مَائِلَاتٌ رُءُوسُهُنَّ كَأَسْنِمَةِ الْبُخْتِ الْمَائِلَةِ لَا يَدْخُلْنَ الْجَنَّةَ وَلَا يَجِدْنَ رِيحَهَا وَإِنَّ رِيحَهَا لَيُوجَدُ مِنْ مَسِيرَةِ كَذَا وَكَذَا (صحيح مسلم - 3971)

சில பெண்கள் வருவார்கள், அவர்கள் தங்களுடைய தலைமுடிகளை ஒட்டகத்தின் திமில் போன்று தங்கள் தலைமுடிகளை வைத்துக் கொள்வார்கள். அலங்கரித்துக் கொல்வார்கள்.

இப்படிப்பட்ட பெண்கள் சொர்க்கத்தின் வாடையைக்கூட நுகரமாட்டார்கள் என்று அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல்: முஸ்லிம், எண்: 3971.

இன்று பார்த்தால் பெயருக்கு ஹிஜாப் என்று ஒரு ஆடையை அணிந்து கொள்கிறார்கள். ஆனால் அவர்களுடைய ஹிஜாப் உள்ளே அவர்கள் அணிந்து இருக்கக்கூடிய அந்த ஆடை, அல்லது அவர்களது அந்த தலையிலே செய்திருக்கக்கூடிய அந்த அலங்காரம், எதை அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எச்சரிக்கை செய்தார்களோ, அப்படியே இருப்பதை நாம் பார்க்கிறோம் சகோதரர்களே.

அது போன்று இந்த ஒட்டு முடிகளை எடுத்துக் கொள்வது, முடி இல்லாதவர்கள் அந்த சவரம் முடி என்று சொல்வார்கள் அல்லவா, அதை கொண்டு தங்களது சிகை அலங்காரங்களை

செய்து கொள்வது, இதையும் அல்லாஹ்வுடைய தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். (2)

அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல்: புகாரி, எண்: 5933

அது போன்று சகோதரர்களே! இன்று பல முஸ்லிம்கள் கொஞ்சம் செல்வம் வந்து விட்டால் உடனே காஃபிர்களை போன்று, அப்படியே அவர்கள் காட்சி அளிக்க ஆரம்பிக்கிறார்கள். அதில் ஒன்று தான் நாய்களை வீட்டில் வளர்ப்பது.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹிவசல்லம் அவர்கள் உங்களுடைய விவசாயத்திற்காக அல்லது வேட்டைக்காக அல்லது தோட்டங்களின் பாதுகாப்புக்காக நாய்கள் வளர்ப்பதை அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் வீட்டில் அழகுக்காக, ஒரு செல்லப்பிராணி வளர்ப்பதற்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அனுமதி அளிக்கவில்லை.

நபியவர்கள் சொன்னார்கள் யார் ஒரு மனிதன் தேவை அற்ற நிலையில் நாய் வளர்ப்பானோ, ஒவ்வொரு நாளும் ஒரு கீராத் நன்மை அவனுக்கு குறைந்து கொண்டே இருக்கும். ஒரு கீராத் என்பது உகது மலையைப் போன்றது. அந்த அளவு நன்மை அவனுக்கு பாழாகிக் கொண்டிருக்கும். (3)

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல்: புகாரி, எண்: 3324.

அடுத்து சகோதரர்களே! இன்று இசைக்கு அடிமையாக இருக்கக்கூடிய வாலிப ஆண்களை பெண்களை பாருங்கள். இதுவும் காஃபிர்களின் கலாச்சாரத்தினால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தாக்கம். எதில் பார்த்தாலும் சரி இசை. அவர்களின் செல்போன்களில் கூட இசையைத்தான் அவர்கள் பயன்படுத்துகிறார்கள். எல்லா விஷயத்திலும் இசை. இந்த இசையை எப்படி ஆக்கிவிட்டார்கள் என்றால், இதுதான் ஒரு மேல்தட்டு மக்களின் அடையாளத்தை போன்று, அல்லது இன்றைய வாழ்க்கையில் மனிதனுக்கு ரிலாக்ஸ் தரக்கூடியது போன்று, வாழ்க்கையில் அந்த மனிதனுக்கு டைம்பாஸ் ஒரு என்டர்டெயின்மென்ட் ஒரு பொழுதுபோக்கு என்று இந்த இசையை புகுத்தி, குர்ஆனிலிருந்து திருப்பிவிட்டார்கள்.

அல்லாஹ் ரப்புல் ஆலமீன் சொல்கிறான் பாருங்கள்...(w31:6)

وَمِنَ النَّاسِ مَنْ يَشْتَرِي لَهْوَ الْحَدِيثِ لِيُضِلَّ عَنْ سَبِيلِ اللَّهِ بِغَيْرِ عِلْمٍ وَيَتَّخِذَهَا هُزُوًا أُولَئِكَ لَهُمْ عَذَابٌ مُهِينٌ

மக்களில் சிலர் வீணான பேச்சுக்களை விலைக்கு வாங்கி, அதை மக்களுக்கு மத்தியில் பரப்பி அல்லாஹ்வின் பாதையிலிருந்து தடுக்கிறார்கள். (அல்குர்ஆன் 31 : 6)

இது இசையைக் குறித்து இறக்கப்பட்டது என்று அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சத்தியம் செய்து கூறுகிறார்கள்.

எனவேதான் இசை கேட்பவர்கள் குர்ஆனில் நாட்டம் கொள்ளமாட்டார்கள். இசை கேட்பவர்கள் மார்க்க உரைகளில் நாட்டம் கொள்ளமாட்டார்கள். இசை கேட்பவர்கள் ஹதீஸ்களை படிப்பதில் இவர்களுக்கு விருப்பம் இருக்காது. முற்றிலுமாக அல்லாஹ்வுடைய தூதர் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் சொன்னதைப் போன்று,

وَقَالَ سَمِعْتُ عَبْدَ اللَّهِ يَقُولُ سَمِعْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ الْغِنَاءُ يُنْبِتُ النِّفَاقَ فِي الْقَلْبِ(سنن أبي داود – 4279)

நயவஞ்சகத்தை, இசை உள்ளத்திலே வளர்க்கிறது. எப்படி ஆற்று நீர் அதன் ஓரத்தில் சின்ன சின்ன புற்பூண்டுகளை முளைப்பிக்கிறதோ, அதேபோன்று இசை உள்ளங்களில் நயவஞ்சகத்தை முளைப்பிக்கின்றது என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: அபூ தாவூத், எண்: 4279.

எனவே இதுவும் மாற்றார்கள் உடைய கலாச்சாரத்தினால் ஏற்பட்ட தாக்கம் என்பதை மறந்து விடக்கூடாது. இப்படி நமது வாழ்க்கையில் ஒவ்வொன்றாக எடுத்துப்பார்த்து, எது பிறருடைய கலாச்சார தாக்கத்தால் நம்முடைய வாழ்க்கையை பாதித்திருக்கிறது, நம்முடைய இபாதத்தை பாதித்திருக்கிறது. நம்முடைய பர்சனாலிட்டி நம்முடைய தனித்தன்மையை பாதித்திருக்கிறது என்பதை அறிந்து, அதிலிருந்து நாம் சுத்தமாகி எந்த ஒரு சிறந்த கலாச்சாரத்தை நோக்கி வர வேண்டும்.

قَالَ عَبْدُ اللَّهِ إِنَّ أَحْسَنَ الْحَدِيثِ كِتَابُ اللَّهِ وَأَحْسَنَ الْهَدْيِ هَدْيُ مُحَمَّدٍ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ (صحيح البخاري – 5633)

வாழ்க்கை கலாச்சாரத்தில் சிறந்த கலாச்சாரம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கலாச்சாரம் என்று சொன்னார்களே,

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: புகாரி, எண்: 5633.

அந்த கலாச்சாரத்தை அறிந்து அதை நாமும் பின்பற்றி, நம்முடைய பிள்ளைகளுக்கும் போதித்து, நம்முடைய வாலிப சகோதர சகோதரிகளுக்கும் போதித்து, இந்த சமுதாயத்தை ஒரு கலப்பற்ற சிறந்த தனித்துவமிக்க, தனி அடையாளமிக்க ஒரு முஸ்லிம் சமுதாயமாக மாற்றுவோமாக!

**ஆமீன்**

أقول قولي هذا أستغفر الله لي ولكم ولسائر المسلمين من كل ذنب فاستغفروه إنه هو الغفور الرحيم

**குறிப்புகள் :**

குறிப்பு 1).

3872 – حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ الْمُثَنَّى حَدَّثَنَا مُعَاذُ بْنُ هِشَامٍ حَدَّثَنِي أَبِي عَنْ يَحْيَى حَدَّثَنِي مُحَمَّدُ بْنُ إِبْرَاهِيمَ بْنِ الْحَارِثِ أَنَّ ابْنَ مَعْدَانَ أَخْبَرَهُ أَنَّ جُبَيْرَ بْنَ نُفَيْرٍ أَخْبَرَهُ أَنَّ عَبْدَ اللَّهِ بْنَ عَمْرِو بْنِ الْعَاصِ أَخْبَرَهُ قَالَ رَأَى رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ عَلَيَّ ثَوْبَيْنِ مُعَصْفَرَيْنِ فَقَالَ إِنَّ هَذِهِ مِنْ ثِيَابِ الْكُفَّارِ فَلَا تَلْبَسْهَا3)

குறிப்பு 2).

وَقَالَ ابْنُ أَبِي شَيْبَةَ: حَدَّثَنَا يُونُسُ بْنُ مُحَمَّدٍ، حَدَّثَنَا فُلَيْحٌ، عَنْ زَيْدِ بْنِ أَسْلَمَ، عَنْ عَطَاءِ بْنِ يَسَارٍ، عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «لَعَنَ اللَّهُ الوَاصِلَةَ وَالمسْتَوْصِلَةَ، وَالوَاشِمَةَ وَالمسْتَوْشِمَةَ« (صحيح البخاري – 5933)

குறிப்பு 3).

حَدَّثَنَا مُوسَى بْنُ إِسْمَاعِيلَ، حَدَّثَنَا هَمَّامٌ، عَنْ يَحْيَى، قَالَ: حَدَّثَنِي أَبُو سَلَمَةَ، أَنَّ أَبَا هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ، حَدَّثَهُ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «مَنْ أَمْسَكَ كَلْبًا يَنْقُصْ مِنْ عَمَلِهِ كُلَّ [ص:131] يَوْمٍ قِيرَاطٌ إِلَّا كَلْبَ حَرْثٍ، أَوْ كَلْبَ مَاشِيَةٍ» (صحيح البخاري– 3324)

DARUL HUDA

.FIRST FLOOR, LINGHI STREET, MANNADY, CHENNAI – 600001 ,(102)211
muftiomar@gmail.com, 044 25247866, 9840174121, 9884469044

/Facebook: https://www.facebook.com/muftiomarsheriffqasimi

Youtube: https://www.youtube.com/channel/UC4CmuDuplV91jmQ2jX32Iwg?view_as=subscriber

/Website: http://www.darulhuda.net